

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி, பருத்திப்பட்டு பசுமைப் பூங்காவில், நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்து ஆய்வு செய்தார். உடன் மேயர் ஜி.உதயக்குமார், மாநகர ஆணையர் சரண்யா, பகுதி செயலாளர், மண்டல தலைவர் ராஜேந்திரன், மீனாட்சி குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.





திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி பூண்டி ஒன்றியம் பென்னாலுர்பேட்டை ராமலிங்கபுரம் வெலமகண்டிகை ஆகிய ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து மக்களின் கோரிக்கைகளை மனுக்களை பதிவு செய்யும் செயல்முறை நேரில் பார்வையிட்டு மனுதார்களுடன் உரையாடி துறை சார்ந்த அதிகாரிகளுடன் இணைந்து அவர்களின் தேவைகளுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு முன்னாள் மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பிருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வேண்டுகோள் விடுத்தார். உடன் ஜான் (எ) பொன்னுசாமி, நா.சீனிவாசுலு, ஏ.ராகவன், டி.வேல்முருகன், எஸ்.நாகபூஷனம், எல்.சிவய்யா, ஆர்.ரகு, விஜயமாலாபாஸ்கர், குமரேசன், கே.பாபு, வெங்கடேசன், என்.எம். சுப்பிரமணி, கோல்டு மணி, ஆர்.காண்டீபன், எஸ்.ராமஜெயம், கே.வி.நாகராஜ் எஸ்.என்.சாய்குமார், சதிஷ்குமார், வள்ளியம்மாள், தீலிப், டி.கே.பாபு ரஹீம், கோபி, குப்பன், விஜயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கலைஞர் நகர் தெற்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் கே.கண்ணன் அறிவிப்பு!

சென்னை, செப்.12-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, விருகம்பாக்கம் தொகுதி, கலைஞர் நகர் தெற்கு பகுதி வட்ட செயலாளர் கூட்டம், எம்.ஜி.ஆர். நகர், அண்ணா பிரதான சாலையில் உள்ள கலைஞர் நகர் பகுதி அலுவலகத்தில் இன்று (12.09.2025) மாலை 6 மணியளவில் நடைபெற உள்ளது.

விருகம்பாக்கம் தொகுதி எம்.எல்.ஏ. ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, கணக்கு நிலைக் குழு தலைவர் க.தனசேகரன், மாநில வர்த்தகரணி செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம், தொகுதி பொறுப்பாளர் வே.உமாகாந்த் ஆலோசனை வழங்க உள்ள இக்கூட்டத்திற்கு, தெற்கு பகுதி அவைத்தலைவர் க. உமாபதி தலைமையில், மாவட்ட துணை செயலாளர், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட துணை செயலாளர் முன்னிலையேற்கும் இக்கூட்டத்தில் பகுதி நிர்வாகிகள், அனைத்து வட்ட செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

பொருள்

செப். 15-ஆம் தேதி பாகம் வாரியாக உறுதி மொழி.

கரூரில் நடக்கும் முப்பெரும் விழாவில் கலந்து கொள்வது சம்பந்தமாக.

இவ்வாறு கலைஞர் நகர் தெற்கு பகுதி தி.மு.க. பகுதி செயலாளர் கே.கண்ணன் தெரிவித்துள்ளார்.

### சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

## இன்று 10 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை,செப்.12-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் இன்று (12.09.2025) மாதவரம் மண்டலம் (மண்டலம்-3), வார்டு-27ல் மாதவரம் பால் காலனி, காமராஜர் சாலை, திருஞானசம்பந்தம் திருமண மண்டபம், தண்டையார்பேட்டை மண்டலம் (மண்டலம்-4), வார்டு-43ல் கும்மாளம்மன் கோயில் தெருவில் உள்ள சமுதாயக் கூடம், இராயபுரம் மண்டலம் (மண்டலம்-5), வார்டு-63ல் புதுப்பேட்டை, சந்திராபானு தெருவில் உள்ள நாதமுனி திருமண மாளிகை, அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்-7), வார்டு-82ல் ஒரகடம், எம். மல்லிகா மஹால், அண்ணா நகர் மண்டலம் (மண்டலம் - 8), வார்டு-95ல் வில்லிவாக்கம், எம்.டி.எச். சாலையில் உள்ள டி.கே.ஏ. திருமண மண்டபம், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்-9), வார்டு-112ல் புலியூர் 2வது பிரதான சாலையில் உள்ள டிரஸ்ட்புரம் விளையாட்டு மைதானம், கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம் - 10), வார்டு-130ல் வடபழனி, அம்மன் கோயில் தெரு, SIMS மருத்துவமனை அருகிலுள்ள மாநகராட்சி விளையாட்டு திடல், வளசரவாக்கம் மண்டலம் (மண்டலம் - 11), வார்டு-150ல் காரம்பாக்கம், சென்னை நடுநிலைப்பள்ளி அருகிலுள்ள செட்டியார் அகரம் காலி மனை, ஆலந்தூர் மண்டலம் (மண்டலம் - 12), வார்டு-157ல் ஆற்காடு சாலையில் உள்ள சான்றோர் அரங்கம், அடையாறு மண்டலம் (மண்டலம் - 13), வார்டு-171ல் ராஜா அண்ணாமலைபுரம், காமராஜ் சாலையில் உள்ள ஜெ. ஜெ. சமுதாயக் கூடம் ஆகிய 10 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### மயிலை மேற்கு பகுதி

# வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கை!

சென்னை, செப்.12-

மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி மயிலை மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம், பகுதி அவைத் தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன் தலைமையில் இன்று (12/9/2025 -வெள்ளி கிழமை ) மாலை 6 மணியளவில் 121வது மாமன்ற அலுவலகத்தில் நடைபெறகிறது.

இக்கூட்டத்திற்கு வட்டச் செயலாளர்கள் மற்றும் அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்ளபடுகிறது.

பொருள்: செப்டம்பர் 15 அண்ணா பிறந்தநாளை விழாவை முன்னிட்டு முன்னிட்டு மற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

# சென்னை குடிநீர் வாரியம் சார்பில் குறை தீர்க்கும் கூட்டம்!

## குடிநீர் வாரிய பகுதி அலுவலகங்களில் நாளை நடைபெறுகிறது!

சென்னை,செப்.12-

சென்னைக் குடிநீர் வாரிய குறை தீர்க்கும் கூட்டம் 13.09.2025 (சனிக்கிழமை) அன்று குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில், குறை தீர்க்கும் கூட்டங்கள் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்திற்கான குறை தீர்க்கும் கூட்டம் 13.09.2025 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:

பகுதி அலுவலகம்-1 - திருவொற்றியூர், பகுதி அலுவலகம்-2 - மணலி, பகுதி அலுவலகம்-3 - மாதவரம், பகுதி அலுவலகம்-4 - தண்டையார்பேட்டை, பகுதி அலுவலகம்-5 - இராயபுரம், பகுதி அலுவலகம்-6 - திரு.வி.க.நகர், பகுதி அலுவலகம்-7 - அம்பத்தூர், பகுதி அலுவலகம்-8 - அண்ணா நகர், பகுதி அலுவலகம்-9 - தேனாம்பேட்டை, பகுதி அலுவலகம்-10 - கோடம்பாக்கம், பகுதி அலுவலகம்-11 - வளசரவாக்கம், பகுதி அலுவலகம்-12 - ஆலந்தூர், பகுதி அலுவலகம்-13 - அடையாறு, பகுதி அலுவலகம்-14 - பெருங்குடி, பகுதி அலுவலகம்-15 - சோழிங்கநல்லூர்,

இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களை யும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.



திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஒன்றியம் சுண்ணாம்பு குளம் பகுதியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் முகாமை தொடங்கி வைத்து நடவடிக்கைகள் மேற்கொண்ட பயனாளிகளுக்கு பல்வேறு சான்றிதழ்கள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கி பார்வையிட்டார் உடன் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், ஒன்றிய கழக செயலாளர்கள் நா.பரிமளம் , கி.வே. ஆனந்த் குமார், பொதுக்குழு உறுப்பினர் பா.செ.குணசேகரன் உள்பட பலர் உள்ளனர்



பெருநகர சென்னை மாநகராட்சி, 10வது மண்டலத்திற்குட்பட்ட 142வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின், மக்கள் குறைதீர்க்கும் 2ம் கட்ட முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி சைதாப்பேட்டை பெருமாள் கோயில் தெருவில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்களின் அன்றாட பிரச்சனைகளை உடனடியாக தீர்த்துவைக்கும் வகையில் 43 சேவைகளுக்கான முகாம்கள் நடைபெற்றன. மேலும் 1000க்கும் மேற்பட்ட பயனாளிகள் இம்முகாமில் பயனடைந்தனர். இம்முகாமில் சிறப்பாக பணியாற்றிய பணியளார்களுக்கு சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி பரிசுகளை வழங்கி பாராட்டினார். உடன் பொதுக்குழு உறுப்பினர்கள் களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், பகுதி துணை செயலாளர் ஆர்.ரமேஷ், வட்ட கழக செயலாளர்கள் எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, மாவட்ட அமைப்பாளர் நா.மணிகண்டன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பெருந்திரளாக பங்கேற்றனர்.

### விடியல் மாண்டிசோரி பயிற்சி பெற்ற சென்னை மாநகராட்சியின்

# 33 மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிச் சான்றிதழ்கள்!

## மேயர் திருமதி ஆர். பிரியா வழங்கினார்!



சென்னை,செப்.12-

ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில் விடியல் மாண்டிசோரி பயிற்சி பெற்ற பெருநகர சென்னை மாநகராட்சியின், 33 மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு நேற்று (11.09.2025) மேயர் திருமதி ஆர். பிரியா பயிற்சி சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினார்.

இந்நிகழ்வில் மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்விக்காக முன்னுரிமை கொடுத்து பல்வேறு திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளில் சிறந்த கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு சிறப்பான முறையில் மாணவர்களுக்கு கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இதில், மழலையர் வகுப்பில் குழந்தைகளுக்கு சிறப்பான கல்வியினை வழங்கிடும் விதமாக மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு விடியல் மாண்டிசோரி கல்வி அறக்கட்டளை சார்பாக மாண்டிசோடி பயிற்சி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் குழந்தைகளின் கற்றல் திறனும், கவனித்தல் திறனும் சிறப்பாக மேம்பட்டுள்ளது. இத்தகைய சிறந்த பயிற்சியை சென்னை பள்ளிகளின் மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு சேவை நோக்கில் விடியல் மாண்டிசோரி கல்வி அறக்கட்டளை வழங்கியுள்ளது பாராட்டத்தக்கது.

கடந்த ஆண்டில் சென்னை மாநகராட்சியில் 33 மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு விடியல் மாண்டிசோரி பயிற்சி வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டிலும் 33 மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு வாரத்திற்கு இரண்டு நாட்கள் என 7 மாதங்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு தற்போது அதற்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. இதன் மூலம் சென்னை மழலையர் பள்ளி குழந்தைகளுக்கு கல்வி கற்றுத்தரும் ஆசிரியர்கள் மேலும், ஈடுபாட்டுடன் குழந்தைகளுக்கு சிறந்த முறையில் கல்வி கற்றுத்தர வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) ம. பிரதிவிராஜ்,மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந. இராமலிங்கம், விடியல் மாண்டிசோரி கல்வி அறக்கட்டளையின் பொருளாளர் திருமதி சுருதி கார்த்திக், நிர்வாகி திருமதி உமா சங்கர், பயிற்சி இயக்குநர் திருமதி ஹேமா ஸ்ரீதரன், மற்றும் கல்வி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




சென்னை வடக்கு மாவட்டம்
பெரம்பூர் தொகுதியில்
நாள் : 12.09.2025 வெள்ளிக்கிழமை
மாலை 4.00 மணி இடம் : 48வது வட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட 840 அடுக்கு மாடி குடியிருப்புகளை திறந்து வைத்து பயனாளிகளுக்கு ஒதுக்கீடு ஆணை

வழங்க வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!



ஆர்.டி.சேகர் MLA
சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர்
Dr.கலாநிதி வீராசாமி MP
கழக அயலக அணி தலைவர்
கன்னிகை ஜி.ஸ்டாலின்
பெரம்பூர் சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளர்
இரா.கருணாநிதி இரா.நரேந்திரன்
S.R.கமலகண்ணன் V.தயாளன் A.தமிழ்ச்செல்வன்
T.கமலகண்ணன் ப.மதிவாணன் க.அமுல்
A.R.R.மலைச்சாமி ந.சர்பஜெயதாஸ் சி.ஆனந்தி
பகுதி நிர்வாகிகள்
மு.சாகுல் அமீது S.சாக்ரடீஸ் வி.வேதா R.ஜோதிமணி V.S.பிரபு
வட்ட செயலாளர்கள்
க.பாபு த.ஆறுமுகம் S.அருள் G.மாரிமுத்து
கேபிள் K.தினகரன் வி.முருகன்
அன்புடன்
க.ஜெயராமன்
பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர்
பெரம்பூர் தெற்கு பகுதி - தி.மு.க
B3 Digital